# 1

# வாழ்த்துரை

## (1:1, 2)

*பவுலின் வாழ்த்துரையில் உயர்வான சொற்றொடர்களான "பரிசுத்தவான்கள்" என்று அழைத்து ஐசுவரியமான ஆசீர்வாதங்களாகிய "கிருபை" மற்றும் "சமாதானம்" என்று குறிப்பிட்டார்.*

## விசுவாசமுள்ள பரிசுத்தவான்களுக்கு ஓர் நிருபம் (1:1)

**[1]தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது:**

முதல் நூற்றாண்டில் ரோம உலகில் ஒரு நிருபம் (கடிதம்) எழுதுகிற அமைப்பைப் பின்பற்றி, பவுல் தனது நிருபத்தை தனது பெயரைக் குறிப்பிட்டு எழுதத்துவங்குகிறார், யாருக்கு எழுதுகிறாரோ அவர்களையும் அடையாளப்படுத்தி, அதற்குப் பிறகு வாழ்த்துரையையும் அத்துடன் உட்படுத்தி எழுதுகிறார்! வழக்கமாக தன்னோடு கூட - அனுப்புகிறவர்களுடைய பெயர்களை வாழ்த்துதலுடன் குறிப்பிடும் பவுல் அதற்குமாறாக இதில் எழுதுகிறார்[1]. ரோமர் புத்தகத்தைத் தவிர, பவுலால் எழுதப்பட்டதாக அதிகாரப்பூர்வமாகக் கருதப்பட்ட நிருபங்கள் தோறும் வாழ்த்துரையில் மற்றவர்களுடைய பெயர்களையும் சேர்த்தே எழுதுகிறார். எபேசியர் புத்தகத்தில் தன்னை மட்டும் குறிப்பிட்டு தாமே அனுப்புவதாகக் காட்டுகிறார்.

**வசனம் 1. தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல்.** இந்த நிருபம் பவுலிடத்திலிருந்து எபேசுவுக்கு அலுவல் ரீதியான தொடர்பாக எழுதப்பட்டது என்பதை இந்த வார்த்தைகள் சுட்டிக் காட்டுகின்றன. "அப்போஸ்தலன்" எனும் வார்த்தை "யாரோ ஒரு மேலதிகாரியால் கட்டளையிட்டு அனுப்பப்பட்டவர்" என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது;[2] ஆகையால் பவுல் தான் கிறிஸ்துவுக்கு அதிகாரம் பெற்ற ஸ்தானாபதி என்பதை உறுதிப்படுத்துகிறார். கொரிந்தியர்கள் பவுலின் அப்போஸ்தலத்துவத்தைக் குறித்து கேள்வியெழுப்பியதால், இரண்டு கொரிந்தியர் நிருபங்களிலும் தான் ஒரு அப்போஸ்தனுக்குரிய தகுதியாம்சங்களை பெற்றிருப்பதாக விளக்கமளித்தார். அவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஒரு கண்கண்ட சாட்சியும் (1 கொரிந்தியர் 15:8; 9:1; காண்க நடபடிகள் 1:22), கொரிந்து சபையின் நிலையிருப்பும் (1 கொரிந்தியர் 9:2), அவர் செய்த அற்புதங்களும் (2 கொரிந்தியர் 12:12) அவர் உண்மையாகவே ஒரு அப்போஸ்தலன் என்பதற்கு ஆதாரமளிக்கின்றன. பவுலின் நியமனமும்

அதிகாரமும் தனக்குத் தானே கையில் எடுத்துக் கொண்டவைகளல்ல, தேவனால் கொடுக்கப்பட்டவை, அவரே அவரை அப்போஸ்தலனாகத் தெரிந்து கொண்டார்.

**வசனம் 1.** இந்த நிருபம் **எபேசுவிலுள்ள பரிசுத்தவான்களுக்கு** எழுதப்பட்டது. (இந்தப் புத்தகத்தில் "ஓர் முகவுரைப்" பாடத்தில் காண்க.) இதில் சொல்லப்பட்ட பட்டப்பெயர் அவருடைய வாசகர்களில் "தேவன் தனியாகப் பிரித்தெடுத்து தமக்காக தெரிந்து கொண்ட பரிசுத்த ஜனங்களைக் காட்டுகிறது."[3] வசனம் 4 கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தேவன் தெரிந்து கொண்டபடியால் பரிசுத்தவான்களாக பவுல் அவர்களைப் பார்த்தார் என்று குறிப்பிடுகிறது. 5:26, 27ல் கிறிஸ்து சபைக்காக மரித்ததின் விளைவாக பரிசுத்தம் முன் வைக்கப்படுக்கிறது.

**வசனம் 1.** தான் எழுதிய கிறிஸ்தவர்களை **விசுவாசிகளாயிருக்கிறவர்கள்** என்று அழைக்கிறார். "விசுவாசிகளாயிருப்பவர்கள்" எனும் வார்த்தை (*pistos* என்பதிலிருந்து) கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்பதை விளக்கப்படுத்துகிறதேயல்லாமல், நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்லது உண்மையுள்ளவர்கள் எனும் ரீதியில் பேசுவதில்லை. கலாத்தியர் 6:10ல், அவிசுவாசிகளுக்கு எதிர்ப்பதமாக இதே வார்த்தையை பவுல் பயன்படுத்தினார். இந்த வார்த்தை 1 தீமோத்தேயு 4:10, 12; 5:16; 6:2 மற்றும் தீத்து 1:1, 6 லும் விசுவாசிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் கிருபையுடன் தெரிந்து கொள்ளப்பட்ட தேவனுடைய ஜனங்கள் அவர்கள் மறுமொழியாக தேவனுடைய அழைப்புக்கு விசுவாசமுள்ள பதில் அளித்தார்கள் என்று அறிவிக்கிறார்.

இறுதியாக, எபேசுவிலிருந்த சகோதரர்களை **கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்களாய்** அடையாளப்படுத்துகிறார். "உள்" எனும் பதம் பரிசுத்தவான்களாகிய விசுவாசிகள் இருக்கும் எல்கை அல்லது பொருளைக் குறிப்பிடுகிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள்" எனும் சொற்றொடர் இரட்சகரை "அபிஷேகம் பண்ணப்பட்டவர்"[4] எனும் நாமத்தில் குறிப்பிடுகிறது. ("கிறிஸ்து" என்பது அவருடைய பட்டத்தையும், "இயேசு" என்பது அவரது நபர்த்துவத்தையும் குறிப்பிடுகிறது.) இந்தப் பட்டம் பவுலின் எழுத்துக்களில் 164 முறை காணப்படுகிறது.[5] இதே வார்த்தையோ அல்லது இதற்குச் சமமான வார்த்தைகளோ 23 முறை எபேசியரிலும், 10 முறை 1:2-14 லும் காணப்படுகிறது.

இந்த நிருபத்தைப் பெற்றவர்கள் கிறிஸ்து இயேசுவுடன் "தொடர்புடையவர்களாய்"[6] வாழ்ந்தவர்கள். சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானத்தைப் பெற்றதன் மூலம் கிறிஸ்துவுக்குள் உட்பட்டார்கள் (காண்க ரோமர் 6:3; கலாத்தியர் 3:27). கிறிஸ்துவுடனான இந்த உறவுமுறை அவர்களைத் தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் என்றும் விசுவாசமுள்ளவர்களென்றும் அடையாளப்படுத்திற்று.

## "கிருபையும்" "சமாதானமும்" (1:2)

**2 நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.**

***வசனம் 2.*** *இதே பயன்பாடு வார்த்தைகள் பவுலின் வேறே ஐந்து புத்தகங்களின் கிரேக்க வசனப்பகுதியில் காணப்படுகிறது,*[7] *மற்றும் சிறிது வேறுபட்ட வார்த்தைகளில் வேறு ஏழு நிருபங்களில் காணப்படுகிறது.*[8] *பவுல்* **கிருபைக்கும்** (*charis*) **சமாதானத்துக்கும்** (*eirēnē*), **தேவன்** *மற்றும்* **இயேசு கிறிஸ்துதான்** *ஊற்றிடமாகக் குறிப்பிடுகிறார், மேலும் ஜெபத்தை ஏறெடுத்து - அவரது வாசகர்கள் "தகுதியற்ற நிலையிலும் தயவையும் ஆழமான நலமுள்ள வாழ்வையும் கிறிஸ்துவிடமிருந்தும் கிறிஸ்து மூலம் அறியப்பட்ட பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும் பெற்று அனுபவிக்க" விரும்புகிறார்.*[9]

*"கிருபையும்" "சமாதானமும்" மறுபடியும் நிருபத்தின் இறுதியில் இணைக்கப்படுகிறது (6:23, 24) மற்றும் நிருபத்தினூடே தனித்தனியேயும் காணப்படுகிறது. "இயேசு கிறிஸ்து" எனும் வார்த்தையுடன் இந்த வாழ்த்துதலில் கர்த்தர் எனும் பட்டத்தையும் சேர்த்துக் கொண்டார், இயேசு தமது ஜனங்கள் மீது அதிகாரமிக்கவராயும் முழுமையான எஜமானனாகவும்* **இருக்கிறார்** *என்பது இதன் பொருள்.*[10]

---

*குறிப்புகள்*

[1]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 4. [2]R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistles to the Galatians, to the Ephesians* and to the *Philippians* (Columbus, Ohio: Wartburg Press, 1946; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1961), 344. [3]Lincoln, 5. [4]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1992), 968. [5]Lenski, 346. [6]Ibid. [7]*ரோமர் 1:7; 1 கொரிந்தியர் 1:3; 2 கொரிந்தியர் 1:2; பிலிப்பியர் 1:2; பிலேமோன் 3.* [8]*கலாத்தியர் 1:3; கொலோசெயர் 1:2; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:2; 1 தீமோத்தேயு 1:2; 2 தீமோத்தேயு 1:2; தீத்து 1:4.* [9]Lincoln, 6. [10]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 466.